***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXIII Code of Criminal Procedure)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT Mannargudi***
***STC.No.239/2026 – P.W. 2 ( LW-6)***

| | |
|---|---|
| *Name* | செல்வநாயகம் (காவல் உதவி ஆய்வாளர்) |
| *Father/Husband's Name* | மீனாட்சிசுந்தரம் |
| *Village* | கோட்டூர் காவல் நிலையம் |
| *Taluk* | மன்னார்குடி |
| *Religion* | |
| *Age* | 52 |

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 17.03.2026*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் கோட்டூர் காவல் நிலையம் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 26.02.2026- தேதியன்று கோட்டூர் காவல் நிலையத்தில் நான் நிலைய பொறுப்பிலிருந்த போது தர்மராஜ் மனைவி கோமதி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவினை பெற்று மனு எண்.108/2026 ஆக மனு பதிவு செய்யப்பட்டு, மனு விசாரணைக்கு பின் கடந்த 27.02.2026 ம் தேதியன்று காவல் நிலைய குற்ற எண்.43/2026 ல் பிரிவுகள் 296(b), 131 BNS ன் கீழ் எதிரியின் மீது வழக்கு பதிவு செய்தேன். **(புகார் மனு அ.சா.ஆ.3 ஆகவும், முதல் தகவல் அறிக்கையின் அச்சு படிவம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

2. பின்னர் அன்றையதினமே மதியம் சுமார் 13.30 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் வித்யா மற்றும் ராகினிஸ்வரி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தினை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன்.**(பார்வைமகசர் அ.சா.ஆ. 5 ஆகவும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**). பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 வரையிலானவர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன்.

3. சாட்சிகள் விசாரணையில் சம்பவம் உண்மை என தெரிய வரவே எதிரியை தேடிவந்த நிலையில் ரெட்டைபுளி பஸ்ஸ்டாப் அருகில் நின்றுக்

கொண்டிருந்தவரை அன்றையதினமே 13.00 மணியளவில் குற்ற காரணம் கூறி கைது செய்து நிலைய பிணையில் விடுவித்தேன்.

4. இத்துடன் எனது புலன்விசாரணையை முடித்து எதிரியின் செய்கையானது பிரிவுகள் பிரிவுகள் 296(b), 131 BNS கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் என கடந்த 27.02.2026-ம் தேதியன்று குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவ இடத்திற்கு செல்லாமலும் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமலும் காவல் நிலையத்திலே வைத்து வழக்கு ஆவணங்களை தயார் செய்து எதிரிக்கு எதிராக கொடுக்கப்பட்ட ஒரு பொய்யான புகாரின் பெயரில் சரிவர விசாரணை செய்யாமல் எதிரிக்கு எதிராக போடப்பட்ட பொய் வழக்கில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் - சரியல்ல சம்பவத்திற்கும் ஆஜர் எதிரிக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.

(ஒம்/-) ஆ.சீதாலெட்சுமி 17.03.2026
நீதித்துறை நடுவர் எண்.2,
மன்னார்குடி.